முருகப்பெருமான் துணை

**மகான் தூர்வாசமுனிவர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**18.07.2023**, செவ்வாய்கிழமை

1. அறமாக உலகமக்களெல்லாம்
அன்னதான நெறி பின்பற்றிட
வரமாக அருளும் ஞானியே
வள்ளலே உன் பெருமை கூறி
2. கூறியே சோபகிருது நள்ளிதிங்கள்
குறைவிலா உபயதிகதி குசன் வாரம்
(சோபகிருது வருடம் ஆடி மாதம் 02 ம் நாள், 18.07.2023, செவ்வாய்கிழமை)
தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
தேசிகனுக்கு தூர்வாசமுனிவர் யானும்
3. யானுரைக்க கலியுக மக்களை
உயர்வழி காட்டி மீட்க
ஞானமாக வந்த தவசியே
ஞாலமதில் உன்வழி வந்தவர்க்கு
4. வந்தவர்க்கு வினை விலகும்
வறுமை கட்டம் அகலும்
சிந்தை தெளிவு பிறக்கும்
சித்திகள் அடைய உண்டான
5. ஆனதொரு அடிப்படை நிலை
அளவிலா சக்தியாகக் கிட்டி
ஞானமாக உள் சோதி கிளம்பி
ஞானியாக உருவெடுக்க நேரும்
6. நேருமை கொண்ட மக்களை
நீதிவழி காட்டி இணைக்கும்
முருகனே அளவிலா தருமனே
முழுமை உன்னால் மற்றவர்க்கு கிட்டும்

7. கிட்டவே வேடதாரிகளையும்
கண்டுத் தேற்றும் ஞானிநீ
திட்டமிட்டு தீவினை வழியில்
தேடி உன் சபைக்கு வந்தாலும்
8. வந்தவர்க்கும் ஞானம் அருளி
வாழ்வதனை ஞானமாக்கும்
செந்தூரரான் சக்தி நீயே
சேவகனும் நீ தலைவனும் நீயே
9. நீயே கலியில் சிறப்புநிலை
நீதி காக்கும் மகா சக்தியாக
தாயாக அருளும் தருமனே
தயாபரனே உலகினை சோதிக்க
10. சோதிக்கநீ எண்ணினால்
செகமே இருண்டு போகுமப்பா
விதிஎன முடிக்க உள்ளதையும்
விரைந்து மாற்றும் வல்லாளன் நீ
11. வல்லாளன் உன்னை வணங்க
வல்லமை கூடி வருவோர்
எல்லா வகையும் பாதுகாப்பு
இனிதே கண்டு தேறுவர் அப்பா
அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—